**CTCLSA வளர்ச்சி உரித்துவ நிதியம் (தொடக்கம் : 27 பெப்ரவரி, 2012)**

**நிதிய முகாமையாளர்**


குகன் விநாயகசுந்தரம்

**நிதியத்தின் குறிக்கோளும் அளவுகோலும்**

நிதியமானது ஒரு திறந்த வளர்ச்சி நிதியம் என்பதுடன், இது மத்திய நீண்ட காலத்தில் மூலதனப் பெறுமதி உயர்வினை அடையும் நோக்கத்தில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட உரித்துவப் பிணையங்களை உள்ளடக்கிய ஒரு பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுத் தேக்கத்தில் முதலீடு செய்கின்றது.

**கருத்துரை**

**நிதியத்தின் விளைவு எதிர் அளவுகோலின் விளைவு**




**நிதியத்தின் கட்டணங்கள்**

முகாமைத்துவக் கட்டணம் 2.25% p.a (தேறிய சொத்தின் பெறுமதியின் ஒரு % ஆக)

காப்பக மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டணம் 0.30% p.a (தேறிய சொத்தின் பெறுமதியின் ஒரு % ஆக )

**காட்சிப்பொருள் 03: நிதியத்தின் விளைவு எதிர் அளவுகோலின் விளைவு**

| காலம்* | நிதியம் | அளவுகோல் | | |
|---|---|---|---|---|
| | | ASPI | S&P SL 20 | ASTRI |
| YTD – 2024 | **35.58%** | 49.66% | 58.46% | 57.81% |
| ஆரம்பத்திலிருந்தான திரட்டு | **229.06%** | 191.14% | 64.51% | 246.89% |
| ஆரம்பத்திலிருந்தான CAGR | **9.71%** | 8.67% | 3.95% | 10.19% |

*குறிப்பு: அனைத்து பங்கு விலைச்சுட்டி (ASPI), அனைத்து பங்கு மொத்த விளைவுச்சுட்டி (ASTRI) மற்றும் S&P ஸ்ரீ லங்கா 20 சுட்டி (S&P SL 20) என்பன 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான கொ.ப.ப. தரவுகளின் அடிப்படையிலாகும்.*


** செயற்திறன்கள் 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான மாத இறுதி விலைகளின் அடிப்படையிலாகும். இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திறன் தரவுகள் கடந்தகால செயற்திறனை பிரதிபலிப்பதுடன், இவை எதிர்கால விளைவுகளுக்கான உத்தரவாதமல்ல.*

31 டிசம்பர் 2024 இல் நிறைவடைந்த காலத்திற்கு நிதியமானது 35.58% ஆல் அதிகரித்தவேளை ASPI மற்றும் S&P SL 20 சுட்டிகள் முறையே 49.66%[i] மற்றும் 58.46%[i] ஆல் அதிகரித்தன. தொடக்கத்திலிருந்து பார்க்கும்போது நிதியமானது 229.06% விளைவினை வழங்கி அதே காலப்பகுதியில் அனைத்து பங்கு விலைச்சுட்டியின் செயற்திறனான 191.14%[i] விளைவினைவிட சிறப்பாகச் செயலாற்றியுள்ளது.

**காட்சிப்பொருள் 04: 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான நிதியத்தின் முதல் 5 உரித்துடைமைகள்**

| தே.சொ. இன் அடிப்படையில் முதல் 5 உரித்துடைமைகள் | | |
|---|---|---|
| பங்கு | டிக்கர் | தே.சொ.பெ.இன் % |
| எக்சஸ் இன்ஜினியரிங் பிஎல்சி | AEL.N0000 | **6%** |
| ஹேலீஸ் பிஎல்சி | HAYL.N0000 | **6%** |
| பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி | PLC.N0000 | **6%** |
| சன்சைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி | SUN.N0000 | **5%** |
| சம்பத் பேங்க் பிஎல்சி | SAMP.N0000 | **5%** |

**காட்சிப்பொருள் 05: 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான நிதியத்தின் துறைசார் ஒதுக்கீடு**




2024 இன் முதல் அரையாண்டின்போது நிதியமானது பின்வருவனவற்றில் முன்னிறுத்தம் செய்தது. வட்டி வீதங்களிலான வீழ்ச்சியினால் நன்மையடையும் கம்பனிகள், உள்ளூர் நுகர்வின் மீட்பிலிருந்து பலனடையக்கூடிய நுகர்வுக் கம்பனிகள், மற்றும் நீண்டகாலத்தில் நன்மை பயக்கக்கூடிய அடிப்படையில் திடமான திரவத்தன்மை கம்பனிகள் என்பவற்றிலாகும். இதன் பிரகாரம், சந்தை வட்டி வீதங்கள் மேலும் வீழ்ச்சியடையும் என்ற எதிர்பார்ப்புடன், நிதியமானது மூலதனப் பொருட்கள், வங்கி மற்றும் நிதி, நுகர்வுத் துறை மற்றும் சுற்றுலாத் துறை போன்றவற்றிற்கான அதன் வெளிப்பாட்டினை அதிகரித்தது.

வருடத்தின் 4 ஆம் காலாண்டின்போது, பின்வருவனவற்றின் காரணமாக சந்தையானது அதன் உத்வேகத்தில் மூழ்கியது. தேர்தல் உறுதியின்மையானது தேர்தலின் பின்னர் விளித்துரைக்கப்பட்டவேளை IMF திட்டத்தில் இருப்பது குறித்த ஜனாதிபதியின் மீளுறுதி மற்றும் கடன் கட்டுப்படுத்தல் செயன்முறையின் தொடர்ச்சி என்பன முதலீட்டாளர் சமூகத்தினால் வரவேற்கப்பட்டது. வங்கியியல் துறையில் நிதியமானது சில இலாபங்களை பதிவுசெய்தவேளை பெறுமதியான கம்பனிகளுக்கான ஒதுக்கீட்டினை அதிகரித்தது.

மேம்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் குறைவான வட்டி வீதங்களுடன் 2025 இல் கம்பனிகளின் இலாபங்கள் வளர்ச்சியடையும் என நாம் எதிர்பார்க்கின்றோம். மேலும், வெளிவாரி கடன் மீள்கட்டமைப்பு செயன்முறையின் வெற்றிகரமான நிறைவு மற்றும் கடன் தரப்படுத்தல் தரமுயர்த்தல் என்பவற்றைத் தொடர்ந்து, பிராந்திய சந்தைகளுடன் ஒப்பிடும்போது கவர்ச்சிகரமான பெறுமதியிடல்களின் காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கொழும்பு பங்குச் சந்தையினை சாத்தியமாக அணுகலாம். வட்டி வீதங்கள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைவதனால், நிலையான வருமானப் பிணையங்களிலிருந்து உரித்துவப் பிணையங்கள் நோக்கி நிதிகள் நகரலாம் என நாம் எதிர்பார்க்கின்றோம். கவர்ச்சிகரமான பெறுமதியிடல்களுடன், உரித்துவமானது ஒரு வரி வினைத்திறனான சொத்து வகுப்பு ஆதலால் நீண்டகால முதலீட்டாளர்களிடையே உரித்துவம் ஒரு முன்னுரிமையான சொத்து வகுப்பாக காணப்படும் என நாம் நம்புகின்றோம். மேலும், பாதீட்டில் வழங்கப்பட்ட வரி நிவாரண நடவடிக்கைகள் மற்றும் அரசாங்கத் துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக செலவழிக்கத்தக்க வருமானத்திலான ஏற்பட்ட அதிகரிப்பானது நுகர்வினை உயர்த்தி 2025 இல் சிறப்பான இலாபமீட்டக்கூடிய கண்ணோட்டத்தினை

விளைவிக்கும். இந்த சாத்தியமான கண்ணோட்டத்தின் காரணமாக குறுகிய காலத்தில் உரித்துவத்திற்கான சொத்து ஒதுக்கீட்டினை 80% முதல் 90% வரை பராமரிப்பதற்கு நாம் தெரிவுசெய்துள்ளோம்.

31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான நிதியத்தின் மொத்த தேறிய சொத்தின் பெறுமதி ரூபா 94.17 மில்லியன் ஆகும் என்பதுடன் நிதியத்தில் 227 அலகுடைமையாளர்கள் காணப்படுகின்றார்கள். 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான அலகொன்றிற்கான மீட்டெடுத்தல் விலையானது ரூ. 32.9062 ஆகும்.

[i] கொழும்பு பங்குப் பரிவர்த்தனை